# வெண்பாவின் தோற்றமும் வளர்ச்சியும்

# Origin and Growth of Venpa

*முனைவர் ஜெ. ஜெயவாணி ஸ்ரீ*
தமிழ்த்துறை
அரசு கலைக்கல்லூரி (த)
கும்பகோணம்

**Dr. J. Jayavani Sri**
*Department of Tamil*
*Government Arts College (A)*
*Kumbakonam*

## ஆய்வுச் சுருக்கம்

*தமிழ்ச் செய்யுள்களில் வடிவத்தால் விரித்தும் குறுகியும் தமது படைப்புக்களை வெளியீட்டவர்கள் தமிழ் நாட்டினர். சுருங்கச் சொல்லி விரித்துப் பார்ப்பது செய்யுள் வெண்பாக்களுக்குரிய சிறப்பு அம்சமாகும். இதனைக் கருவியாகக் கொண்டு விழுமிய மணியனைய கருத்துக்களைப் பொதிந்து வெளியிட்டார்கள் பலர். ஓவ்வொருவர்க்குள்ளும் போட்டித் திறமையென அவரவர் படைப்புக்கள் நம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றன. அவ்வகையில் வெண்பாகள் அமைப்பு, வாய்ப்பாடு, இலக்கணம் என விளக்கி, தொல்காப்பிய வெண்பாவின் வகைகளில் தொடங்கி மென்மேலும் எங்ஙனம் வளர்ச்சியடைந்துள்ளது என்பதை பட்டியலிட்டு காட்டப்பட்டுள்ளது. யார் யார் வெண்பாக்களை இயற்றியுள்ளனர். அதன் வடிவங்கள், வெண்பாவின் பெயர்கள், அடுத்தடுத்து நமக்கு கிடைத்த வெண்பாப் பட்டியல்கள் என வகைப்படுத்திக் காட்டுவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது. முடிவாக அடிக்குறிப்பு, துணைநூல் பட்டியலும் இணைக்கப்பட்டுள்ளன.*

***முக்கியச்சொற்கள்:*** *வெண்பாக்கள், வாய்பாடு, இலக்கணம், தொல்காப்பியம், யாப்பு*

## Abstract

*Tamil Nadu is the people who publish their works in Tamil poetry, which are expanded and shortened in form. The special feature of the poems is to summarize and elaborate. Using this as a tool, many people published the ideas of the great concepts. Each one of them has a competitive talent that thrills us with their own creations. In this way, it is explained as the structure, formula, and grammar of the venbas and listed how the men have developed, beginning with the varieties of the Tolkappiya Venba. Who has composed the Venbas. This article is to classify its shapes, the names of the venba, and the subsequent lists of whitepasses that we have received.*

***Keywords:*** *Venbas, Formulas, Grammar, Tolkappiyam, Yappu.*

**Citation**

Jayavani Sri, J. "Origin and Growth of Venpa." *Journal of Tamil Culture and Literature*, vol. 2, no. 4, 2023, pp. 37–44.

**முன்னுரை**

*தமிழ்ச் செய்யுள்களில் வடிவத்தால் விரித்தும் குறுகியும் தமது படைப்புக்களை வெளியீட்டவர்கள்தமிழ்நாட்டினர். சுருங்கச்சொல்லி விரித்துப்பார்ப்பது செய்யுள்வெண்பாக்களுக்குரிய சிறப்பு அம்சமாகும். இதனைக் கருவியாகக் கொண்டு விழுமிய மணியனைய கருத்துக்களைப் பொதிந்து வெளியிட்டார்கள் பலர். ஒவ்வொருவர்க்குள்ளும் போட்டித் திறமையென அவரவர் படைப்புக்கள் நம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றன. அவ்வகையில் வெண்பாகள் அமைப்பு, வாய்ப்பாடு, இலக்கணம் என விளக்கி, தொல்காப்பிய வெண்பாவின் வகைகளில் தொடங்கி மென்ண் மேலும் எங்ஙனம் வளர்ச்சியடைந்து என்பதை பட்டியலிட்டு காட்டுவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.*

**வெண்பா**

*செப்பலோசை உடையது; ஈற்றடி முச்சீரும் மற்றசீர்கள் நாற்சீரும் பெற்று வரும்; வேற்றுத் தளைகள் இன்றி வெண்சீர் வெண்டளையும், இயற்சீர் வெண்டளையும் மட்டும் பயின்று வரும்; ஈற்றடியின் ஈற்றுச்சீர்நாள், மலர், காசு, பிறப்பு எனும் வாய்ப்பாடுகளுள் ஏதேனும் ஒன்றைக் கொண்டு முடியும்; இவை வெண்பாவின் இலக்கணங்களாக வகுக்கின்றனர்.*

***வெண்பா ஈற்றடி முச்சீர்த்தாகும்***
***அசைச் சீர்த்தாகும் அவ்வழியான.***[1]

*வெண்பாவின் ஈற்றடி மூன்று சீராகவும், அதன் கண் இறுதிச்சீர் அசைச்சீராகவும் வரும் என்று எடுத்துக்காட்டுகின்றார்.*

**தொல்காப்பிய வெண்பாவின் வகைகள்**

*குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா என தொல்காப்பியர் வெண்பாவை வகைப்படுத்தி உள்ளார்.*

***நெடுவெண்பாட்டே குறுவெண்பாட்டே***
***கைக்கிளை பரிபாட்டங்கதச் செய்யுளோடு***
***ஒத்தவை எல்லாம் வெண்பாயாப்பின்.***[2]

*என வெண்சீராகவும், இயற்சீராகவும், வெண்டளையானும், செப்பலோசையானும், அளவடியானும், முச்சீரீற்றடியானும் வருவதாகும் என்கிறார்.*

**குறள் வெண்பா**

*வெண்பாவின் இலக்கணங்கள் பொருந்தி இரண்டு அடிகளை கொண்டு வருவது குறள் வெண்பாவாகும். உதாரணமாக,*

***யாதானும் நாடாமல் ஓராமல் என்னொருவன்***
***சாந்துணையும் கல்லாதவாறு.***[3]

*என்பதால் அறிய முடிகிறது.*

**சிந்தியல் வெண்பா**

*வெண்பாவின் இலக்கணம் பொருந்தி மூன்றடியால் வரப்பெறுவதாகும். அவை நேரிசை சிந்தியல் வெண்பா, இன்னிசை சிந்தியல் வெண்பா என இருவகைப்படும்.*

*நற்கொற்றவாயில் நறுங்குவளைத்தார் கொண்டு*
*சுற்றம் வண்டு ஆர்ப்பப்புடைத்தாளே*
*பொற்றேரான் மாலை நல்வாயில் மகள்.*[4]

*என்பது நேரிசை சிந்தியல் வெண்பா எனப்படும்.*

*சுரையாழ அம்மிமிதப்ப - வரையனைய*
*யானைக்கு நீத்துமுயற்கு நிலையென்ப*
*கானக நாடன் சுனை.*[5]

*என்பது இன்னிசை சிந்தியல் வெண்பாவாகும்.*

**நேரிசை வெண்பா**

*வெண்பாவின் பொது இலக்கணம் பொருந்தி, இரண்டாம் அடியில் தனிச்சொல் பெற்று ஒரு அல்லது இருவி கற்பத்தால் அமைத்து நான்கடி கொண்டு வருவது நேரிசை வெண்பாவாகும்.*

*அறுசுவை உண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட*
*மறுசிகை நீக்கியுண்டாரும் - வறிஞராய்ச்*
*சென்றிரப்பர் ஓரிடத்துக்கூழெனில் செல்வமென்*
*றுண்டாகவைக் கற்பாற் ஒன்று.*[6]

**இன்னிசை வெண்பா**

*நேரிசை வெண்பாவில் மாறுபட்டு வரும் வெண்பாக்கள். அதாவது, அடிதோறும் தனிச்சொல் பெறுதல், முதல் அடியில் தனிச்சொல் பெறுதல், பல விகற்பத்தால் வருதல் ஆகிய அனைத்தும் இன்னிசை வெண்பாவாக,*

*கல்வரை ஏறிக் கடுவன் கனிவாழை*
*எல்லுறு போழ்தின் இனிய பழங்கைக் கொண்*
*டொல்லொலையோடு மலைநாடன் தன் கேண்மை*
*சொல்லச் சொரியும்வளை.*[7]

*என வழங்கப்படுகிறது.*

**பஃறொடை வெண்பா**

*வெண்பாவின் பொது இலக்கணம் பொருந்தி, நான்கடியின் மிக்க பல அடிகளால் மிகுதி 12 அடிகள் வரை வருவதாகும்.*

*சிற்றாறு பாய்ந்துகளுஞ்சேயரிக் கண்ணினாய்*
*வற்றா வளவயலும் வாய்மாண்ட ஏரியும்*
*பற்றார்ப்பிணிக்கு மதிலும் படுகிடங்கும்*
*ஒப்பவுடைத்தா ஒலியோவா நீர்ப்புட்கள்*
*. . . . . . .*
*விற்பொலிந்த வெம்புருவத்தான்.*[8]

*இவ்வடிப்படையில் வெண்பாவைப் பற்றி பல்வேறு நூல்கள் தோன்றியுள்ளன.*

**அகலிகை வெண்பா**

*அகலிகை வெண்பா என்பது அகலிகையைப் பற்றி வெண்பாவால் ஆகிய நூல் என்று பொருள் தரும். இது பாரிபாட்டு, நளவெண்பா என்ற பெயர்களோடு ஒப்பதாகும்.*[9]

**சேத்திரத் திருவெண்பா**

*''திருவெண்பா'' என்பது மணிவாசகர் பாடியது. ''சேத்திரத் திருவெண்பா'' என்பது ஐயடிகள் காடவர்கோன் பாடியது. இங்கு 'வெண்பா'' யாப்பில் அமைந்தவற்றை வெண்பா எனும் சிற்றிலக்கியமாக கொள்கின்றனர். திருவெண்பாவில் பதினொன்று பாடல்களும், சேத்திரத் திருவெண்பாவில் இருபத்து நான்கு பாடல்களும் உள்ளன.*

*வெண்பாயாப்பால் அமைந்தவற்றையெல்லாம் ''வெண்பா'' என்னும் செய்யுள் வகையாக கூறும் வழக்கில்லை. இச்செய்யுள் வகைக்கு ஒரு இலக்கணத்தைக் கூறல் அரிது. வெண்பாவும் சங்க இலக்கியங்களில் காணாத ஒன்று என்பது கருதத்தக்கது.*

*செந்தண்டமிழ் மொழியில் உள்ள சிற்றிலக்கிய வகைகளில் வெண்பாவால் அமைந்த நூல்கள் பல. பாட்டுடைத் தலைவருடைய நாடு முதலிய பத்து அங்கங்களை சிறந்து வெண்பாயாப்பினால் பாடப்பட்ட வனாகதசாங்கம், சின்னப்பூ என்னும் இரண்டு சிற்றிலக்கியங்கள் உண்டு. அவற்றுள் ஏதேனும் ஒன்றினை தனியே சிறப்பித்து 100 வெண்பாக்களால் பாடுவது மரபு. அவை அவ்வப்பெயராலேயே வழங்கும் உரையை சிறப்பித்து பாடுவது ஊர் வெண்பா எனப்படும்.*[10]

*ஒரு காலத்தில் தீராத வறுமை வந்து வந்து புகுந்து கொண்டு விட்டு நீங்காமல் வாட்டியது. அப்பொழுது மிதிமாலை என்னும் ஒரு நூல் செய்து முருகனை வழிபட்டார். சில நாளில் வறுமை நீங்கியது. அந்நூலில்,*

***பொன்னின் மாலை வெள்ளிமலை***
***யுன்முது சொமாயவன் பூமி மற்றுன் சீதனம்;***
***. . . . . .***
***சோதிவடிவேலவனேயாதியுமை பாலனே***
***சுப்ரமணியக்கவுளே.***[11]

*இதில், வறுமை நீங்குவதற்கும் பாடல்கள் அமைத்து, முருகனை வழிபட்டால் வறுமை நீங்கும் என விவரிக்கிறது. எனவே, முருகனை வழிபட வேண்டும் என்கிறார். அது மட்டுமல்லாமல் நோய் தீருவதற்கும் செய்யுள் அமைத்து பாடியுள்ளார்.*

**சிவசிவ வெண்பா**

*தமிழ்நாட்டில் பழைய காலம் முதல் எழுந்த இலக்கிய நூல்களுள்ளே பலவகையாலும் சிறப் பெய்தியது திருக்குறளே யாகும். தமிழ் நூலாசிரியர்கள் யாவராலும் போற்றப் பெறுவது. அது சமய வேறுபாடின்றித் தமிழாசிரியர் பலரும் அந்நூலைப் பாராட்டுகின்றனர். திருக்குறள் கருத்துக்களையும் சொல்லமைதியையும் பெரும்பாலும் எல்லாத் தமிழ்நூல்களிலும் காணலாம்.*

*சிறந்த நீதி நூலாகிய அக்குறளைச் சார்ந்து பிற்காலத்தில் பல வகையான நூல்கள் உண்டாயின. அந்நூற்பாக்களைச் செய்யுட்களின் இடையிலும், இறுதியிலும் அமைத்துச் சில*

*நூல்கள் இயற்றப் பெற்றுள்ளன. இங்ஙனம் ஒரு நூலின் பகுதிகளைச் செய்யுளில் அமைத்துப் பாடுதல் வடமொழியிலும் உண்டு. வேதபாதஸ்தவம் போன்ற நூல்கள் அத்தகையனவே.*

*திருகுறட்பாக்களுக்கு உதாரணமோ விளக்கமோ கூறி அதனோடு குறளையும் கொண்டு அமைந்த செய்யுட்களையுடைய நூல்களுள் சிவ சிவ வெண்பா ஒன்றாகும். இதனைப் போன்ற சில நூல்கள் இதற்கு முன்னும் உண்டு; பின்னும் உண்டு. அவற்றுள் இப்பொழுது தெரிந்தவை வரலாறு;*

**சினேந்திர வெண்பா**

*இந்நூல் இரண்டாமடியின் மூன்றாச் சீர் சினேந்திரனே என்னும் விளியமைந்த வெண்பாக்களாலானது. இதனை இயற்றியவர் ஒரு சைனர் என்பது சொல்லாமலே விளங்கும். ஒவ்வொரு குறளையும் ஈற்றடி இரண்டாகப் பெற்ற 1330 வெண்பாக்கள் இந்நூலில் உண்டென்று பல வருடங்களுக்கு முன் வேதாரண்யத்திலிருந்த சைன நண்பர் ஒருவர் கூறினார். இந்நூலிலிருந்து சில வெண்பாக்களையும் சொல்லிக் காட்டினர். இப்பொழுது இது கிடைத்தற்கரிது.*

**இரங்கேச வெண்பா**

*பிறைசைச்சாந்த கவிராயர் என்பவர் இயற்றியது. இரங்கேசா என்னும் விளியமைந்தது. ஒவ்வோர் அதிகாரத்தின் இன்றும் ஒவ்வொரு குறளை எடுத்தமைந்த வெண்பாக்களை உடையது. இது நீதிசூடாமணி என்றும் பெயர் பெறும்; உரையொடு அச்சிடப்பட்டுள்ளது.*

**தினகரவெண்பா**

*இது 16 - ஆம் நூற்றாண்டின் இறுதியில் தொண்டை நாட்டிலுள்ள கோவூரென்னும் ஊரில் வாழ்ந்திருந்த தினகரர் என்று சீர்கருணீகச் செல்வர் ஒருவரை முன்னிலைப்படுத்தி அதிகாரத்திற்கு ஒரு குறளாக எடுத்து வெண்பாவில் அமைத்துப் பாடப்பெற்ற நூல். இது சென்னைச் சருவகலா சாலைத் தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவர் ஸ்ரீமான் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்களால் பதிப்பிக்கப் பெற்றது.*

**வடமலை வெண்பா**

*காவை வடமலையப்ப பிள்ளையை முன்னிலைப்படுத்தி ஒவ்வோர் அதிகாரத்திலிருந்து ஒவ்வொரு குறளை எடுத்து அமைத்த வெண்பாக்களையுடையது; அச்சிடப்பெற்றுள்ளது. இதனை இயற்றியவர் பாகை அபுகப்பன் என்னும் புலவர்.*

**திருமலை வெண்பா**

*திருமலைக் கொழுந்து பிள்ளை என்பவரை முன்னிலைப்படுத்தியது. ஓர் அதிகாரத்திற்கு ஒரு வெண்பா அமைந்துள்ளது.*

**முதுமொழி மேல் வைப்பு**

*அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்றுக்கும் திருக்குறட்பாக்களையும், வீட்டுப்பால் என்ற பகுதிக்குச்சித்தாந்த சாத்திரமாகிய திருவருட்பயனலுள்ள குறள் வெண்பாக்களையும் மேற்கோளாக உடையது; வெண்பாக்களாலானது; இது பதிப்பிக்கப் படவில்லை.*

**திருப்புல்லாணிமாலை**

*திருப்புல்லாணியில் (தர்ப்பசயனத்தில்) கோயில் கொண்டெழுந்தருளிய திருமாலை முன்னிலைப்படுத்தி அதிகாரத்திற்கு ஒரு செய்யுளாகக் கொண்டு பாடப்பெற்றது. இது கட்டளைக் கலித்துறையில் அமைந்தது. மதுரை தமிழ்ச்சங்கத்துப் பிரசுரமாக ஸ்ரீமான் திரு. நாராண ஐயங்காரவர்களால் வெளியிடப்பட்டுள்ளது.*

*ஒவ்வொரு திருக்குறட் பாவையும் ஒவ்வொரு விருத்தத்தில் அமைத்து 1330 செய்யுட்களால் இயற்றப் பெற்ற நூல் ஒன்று உளதென ஸ்ரீ மான் வையாபுரிப்பிள்ளை தினகர வெண்பா முகவுரையிலே எழுதியிருக்கின்றனர்.*

**சோமேசர் முதுமொழி வெண்பா**

*தொண்டை நாட்டிலுள்ள குளத்தூரில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ சோமமேசரை முன்னிலைப்படுத்தித் திருவாவடுதுறையாதீனத்து வித்துவான் ஸ்ரீ சிவஞான சுவாமிகள் இயற்றியது. இது 133 வெண்பாக்களால் ஆகியது.*

**திருத்தொண்டர் மாலை**

*இது திருத்தொண்டர் வெண்பாவென்றும் சொல்லப்படும். குமாரபாரதி என்பவரால் இயற்றப் பெற்றது. இதில் குறளிலுள்ள வரிசைப் படிவெண்பாக்கள் அமையவில்லை. பெரிய புராணத்தில் கூறப்படும் நாயன்மார்களுடைய வரலாற்றின் நீதியாக ஒவ்வொரு குறளை இணைத்து அந்நாயனார்சரித வரிசையிலே பாடப்பெற்ற 100 வெண்பாக்களையுடையது; அச்சிடப் பெற்றுள்ளது.*

**வள்ளுவர் நேரிசை**

*காலஞ்சென்ற அரஞ்சண்முகனார் இயற்றியது. நேரிசை வெண்பாக்களாலானது.*

**முருகேசர் முதுநெறி வெண்பா**

*சிதம்பரம் ஈசானியமடத்து இராமலிங்க சுவாமிகள் இயற்றியது. 133 வெண்பாக்களால் அமைந்தது; உரையுடன் பதிப்பிக்கப்பட்டுள்ளது.*

**திருக்குறட்குமரேச வெண்பா**

*தூத்துக்குடியிலுள்ள ஸ்ரீமான்ஜக வீரபாண்டியன். ஒவ்வொரு குறளுக்கும் ஒவ்வொரு வெண்பாவாகக் குமரேசரை முன்னிலைப்படுத்திச் செய்யப் பெற்ற நூல் ஆசிரியரால் விரிவான உரையுடன் வெளியிடப்பட்டு வருகின்றது. சிவ சிவ வெண்பாவென்பது சிதம்பரம் பச்சைக் கடந்தையர் மடத்துச் சென்னமல்லையர் என்பவரால் இயற்றப்பெற்றது. இதனை அரங்கேற்றிய காலம்சகம் 1690 (கி. பி. 1767- 68) என்று சிறப்புப்பாயிரம் தெரிவிக்கின்றது.*

**சிலேடை வெண்பா நூற்கொத்து**

*இந்நூல் சிங்கையில் எழுந்தருளிய சிவபெருமான் மீது சிலேடை வெண்பாக்களினாலாகியது என விரிதலின், மூன்று சொல் இரண்டு சந்தியாய்த் தொக்க அன்மொழித் தொகையாய் நூற்குக் காரணகுறியாயிற்று. முன்னது ஏழாம் வேற்றுமைப் பொருளும் பயனும் உடன் தொக்கதொகையதாகவும் வந்த பன்மொழித் தொடரின் கண்நின்ற அன்மொழி தொகையாகும்.*

*சிங்கையில் எழுந்தருளிய சிவபெருமானைப் பற்றிப் பாடிய சிலேடை வெண்பாக்களிகாலாகிய நூல் எனப் பொருள் கூறி, இரண்டனுருபும் பொருளும் உடன் தொக்க தொகையோடு மூன்றனுருபும் பொருளும் உடன்தொக்க தொகையதாய்நின்ற அன்மொழித் தொகையாய்க் கோடலும் ஒன்று.*

*சிங்கை - ஒரு திருப்பதி. இது விக்கிரமசிங்கபுரம் என்பதன் மரூஉ. இது பாண்டி நாட்டுத் திருப்பதிகளுள் ஒன்று. அஃது இடவாகுபெயராய் ஆண்டெழுந்தருளிய இறைவன் மேலாயிற்று. இதில் எழுந்தருளிய சிவபெருமான் திருப்பெயர் கலியாணசுந்தரர் அம்மையார் திருப்பெயர் திருமணக்கோல நாயகி. இப்பதி திராவிட மா பாடிய ஆசிரியராகிய சிவஞான முனிவர் பிறந்த இடம்.*

*தமிழ்ச் செய்யுள்களில் வடிவத்தால் குறுகியது குறள் வெண்பா. அதனைத் திருவள்ளுவர் கருவியாகக் கொண்டு விழுமிய மணியனைய கருத்துக்களைப் பொதிந்து வெளியிட்டார். பொருட்பொதிவில் குறள் வெண்பாக்களுக்கு அடுத்து நிற்பன சிலேடை வெண்பாக்களேஆகும்.*

*சிலேடை வெண்பா என்பதுச் லேசா என்னும் ஆரிய மொழியின் திரிபு. இவ்வாறாக வெண்பா அமைப்பில் பல்வேறு நூல்கள் இடம்பெற்றுள்ளன.*

**புகழேந்தி புலவர்**

*நளவெண்பா என்னும் காப்பியம் 16 - ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புகழேந்தி புலவர் இயற்றினார். சங்க மரபினை ஒட்டி 'வெண்பாவிற்கோர் புகழேந்தி" எனப் பாராட்டப்பட்டவர். நளவெண்பாவை, சுயம்வரகாண்டம் - 178, கலிதொடர் காண்டம் - 155, கலிநீங்கு காண்டம் - 94 என மூன்று காண்டங்களாகப் பிரித்து, மொத்தமாக 427 வெண்பாக்களை வழங்கியுள்ளார். நளவெண்பா சிறுகாப்பியம், பெருங்காப்பிய வகையில் அடக்குவதற்கு உரியனவாகும்.*

**தொகுப்புரை**

*மக்கள் அறமும் அன்பும் பண்பும் உடையவராகக் காவியப் பண்பு கண்டு இன்புறும் நீரராய் வாழ, வழி வகுத்துத் தந்தவர்கள் பலர். அவ்வகையில் நம் முன்னோர்களின் மரபுப் பஜ சுருங்கக் கூறி விரித்துப் பார்ப்பது எனும் வகைகளில் காப்பியமாக்கி உள்ளனர். வெண்பாக்கள் வல்லுனர்களும், புலவர்களும் நமக்கு தந்த அரியக் கொடையாகும். அதனைக் கட்டிக் காக்க வேண்டியது நம்கடமையாகும்.*

**அடிக் குறிப்பு**

1. *இளம்பூரணனார் உரை, தொல். பொருள். 378.*
2. *மேலது. 423*
3. *குறள். 397.*
4. *ஜான்பீட்டர், யாப்பு இலக்கணம், செய்யுளியல், ப. 6.*
5. *மேலது. ப. 6.*
6. *நாலடி. 1.*
7. *ஜான்பீட்டர், யாப்பு இலக்கணம், கைக்கிளை. 7.*
8. *மேலது, யாப்பு. 8.*

9. கு. அருணாசலகவுண்டர், அகலிகை வெண்பா, முகவுரை.
10. திருப்புலியூர்கேசிகன், நளவெண்பா, முகவுரை.
11. நவச்சியாப்புலவர், சிலேடைவெண்பா,நூற்கொத்து,முகவுரை.

**துணைநூற்பட்டியல்**

1. இளம்பூரணார் உரை, தொல்காப்பியம், சாரதா பதிப்பகம், சென்னை, 600014.
2. அ. மாணிக்கம், திருக்குறள், தென்றல்நிலையம், சிதம்பரம் - 608001.
3. ஜான்பீட்டர், யாப்பு இலக்கணம்,
4. ச. சுபாஷ் சந்திரபோஸ், தமிழ் இலக்கிய வரலாறு, பாவை பப்ளிகேசன்ஸ், 142, ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 600014, திருச்சி - அக்டோபர் - 2013.
5. அவ்வை. துரைசாமிப்பிள்ளை, நற்றிணை, அய்யனார் பதிப்பகம், 4-87, 6 வதுதெரு, விநாயகபுரம், காரணை, புதுச்சேரி, கூடுவாஞ்சேரி, சென்னை - 603 202.
6. நவச்சியாப்புலவர், சிலேடைவெண்பா, நூற்கொத்து, கழகவெளியீடு, திருநெல்வேலி, 6.
7. புலியூர்க்கேசிகன், நளவெண்பா, பாரிநிலையம், 184, பிராட்வே, சென்னை - 600 108, முதற்பதிப்பு - 1961, மறுபதிப்பு -2009.

**References**

1. Ilampooranaar Urai, Tholkappiyam, Sarada Publishing House, Chennai, 600014.
2. Manickam, A., Thirukkural, Thendral Nilayam, Chidambaram - 608001.
3. John Peter, Yappu Ilakkanam.
4. Subhash Chandra Bose, S., Tamil Ilakiya Varalaru, Paavai Publications, 142 Janijon Khan Road, Royapettah, Chennai - 600014, Trichy - October - 2013.
5. Avvai. Duraisamy Pillai, Natrinai, Ayyanar Publishing House, 4-87, 6th Street, Vinayagapuram, Karanai, Puducherry, Guduvancheri, Chennai - 603 202.
6. Navachiya Pulavar, Siledaivenpa, Noorkothu, Kazhagam Publication, Tirunelveli-6.
7. PuliyurKesikan, Nalavenpa, Pari Nilayam, 184, Broadway, Chennai - 600 108, First Edition - 1961, Reprint - 2009.